
ஸ்பைடரின்
பாதாளப் போராட்டம் !
லயன்
காமிக்ஸ்
முழுநீளச்
சித்திரக் கதை
விலை
ரூ.2/-


விரைவில் வருகிறது!
பழி வாங்கும்
பொம்மை
விலை
ரூ 2
லயன்
காமிக்ஸ்

# THE LIGHT HAS GONE...





ஸ்பைடரின்
பாதாளப்போராட்டம்
இடம்: வேரன்வைல் கூட்டுறவு வங்கி மானேஜர் அறை— அவர் முன் நின்றதோ-ஒரு சிறிய கரிய பொம்மை ..ஸ்பைடரின் உருவ பொம்மை!
ஸ்-ஸ்பைடர்! .. உன் உத்தரவு எதுவாகயிருந்தாலும் அதன்படி நடப்பேன்!


கரிய உருவத்தை தன் பாக்கெட்டினுள் சொருகிக் கொண்டு, இண்டர்காமை தட்டிவிட்டார் வங்கியின் மானேஜர் - மேஸன் வில்லார்டு ..
மிஸ்டர் ராலிங்! நான் பெட்டகத்திற்குப் போகிறேன். சிறிது நேரமாகும் ..!


சில நிமிடங்களுக்குப் பின்னர், மேஸன் தன் கைப் பெட்டியில் டாலர் நோட்டுக்களை அமுக்கிக் கொண்டிருந்தார்!
...இன்னும் நிறைய பணம் தேவை! பணம்!... பணம்!


மேஸன் பெட்டகத்தைவிட்டுக் கிளம்பிய பொழுது வங்கியின் இருப்பில் பல லட்சம் டாலர்கள் குறைந்திருந்தன...
நன்றி ராலிங்ஸ்! இனி நீங்கள் பூட்டிவிடலாம்!
ஓ.கே. சார்!


மேஸன் வில்லாடை பார்த்த அடுத்த நபர், சிறகுப் பாறை தேசீய பார்க்கின் கண்காணிப்பாளர் ஜிம்!...அதுவும் ஒரு வாரத்திற்குப் பின்-500 மைல் தொலைவில்!
உங்களுக்கு உதவி செய்ததில் மெத்த மகிழ்ச்சி மிஸ்டர் ஸ்பைடர்!
ஹேய், இந்த ஜூஸ் பேர்வழி இங்கே எப்படி வந்தான்?


அதே கணம் நகைக் கடை ஒன்றின் அப்பழுக் கற்ற மானேஜர், ''ஸ்பைடருக்கு உதவி'' செய்து கொண்டிருந்தார்!
சரி, சரி, மிஸ்டர் ஸ்பைடர்... உங்களுக்கு உதவி செய்ய நான் புண்ணியம் செய் திருக்க வேண்டும்!
கடையிலேயே விலைகூடிய வைரங்கள் இவைதான்!


ஒரு வாரத்திற்குப் பின், முடுக்கிவிடப் பட்ட அந்த மானேஜர், சிறகுப்பாறை வழிகாட்டி கம்பத்தில், ஒய்யாரமாகத் தொங்கிக் கொண்டிருந்தார்!
ஹேய் மிஸ்டர்! அங்கே என்ன செய்கிறாய்?
நா-நான் ஸ்பைடருக்கு உதவிசெய்துகொண்டிருந் தேன்! அவருக்கு என்னை ரொம்பப் பிடித்துப் போய்விட்டது!


'ஸ்பைடருக்கு உதவி செய்யும்' பரோபகாரிகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துவந்தது! கம்பெனியின் இரகசியங்களை அம்பலமாக்கும்
மானேஜர்கள், பணத்தைக் கையாடல் செய்யும் கேஷியர்கள், கணக்கில் சால்ஜாப்புக் காட்டும் கணக்கப்பிள்ளை - என பல பரோபகாரிகள் அவர்களுள் இருந்தனர்!
REST FINANCE


அவர்களில் ஒவ்வொருவரும், சிறகுப் பாறை பார்க்கிலும்-அதன் அருகிலும் கண்டுபிடிக்கப்பட்டனர்... கரிய ஸ்பைடர் பொம்மையுடன் - போண்டிகளாக!
அதோ, இன்னொரு கிறுக்கன்! வா, இவனையும் பிடித்துச் செல்வோம்!


பரிதாபத்திற்குரிய அந்த மனிதர்களுக்கு எதுவுமே ஞாபகம் இல்லை ..ஸ்பைடரை சந்தித்ததாக மட்டுமே அனைவரும் புலம்பினர்...
பணத்தைப் பெட்டகத்திலிருந்து எடுத்ததாக எனக்கு ஞாபகம் இல்லை...
...ஆனால், ஸ்பைடரை மட்டும் ஞாபகம் உள்ளது!
எல்லோருமே இதைத் தான் சொல்லுகிறார்கள்!


மறுநாள் காலை, நாட்டின் அனைத்து நாளேடுகளும், ஒவ்வொரு குற்றத்திலும் மையமாக விளங்கிய அந்தக் கரிய உருவத்தை நோக்கி வசைமாறி பொழிந்தன...
மீண்டும் ஸ்பைடரின் கைவரிசை!
ஸ்பைடர் திருந்தவே மாட்
தினச்சுடர்
அதே சமயம் இருண்டதொரு குகையில்...
மூளையில்லா நிருபர் பட்டாளம்! பத்திரிகை ஆசிரியர்களின் அனற்றல்கள்! ...எத்தனை நாட்களுக்குத் தான் இவைகளை சகித்துக் கொள்வது?... எனக்கும் இந்தக் குற்றங்களுக்கும் என்ன தொடர்பு?
நிஜமாகவே தானா தொடர்பு கிடையாது!


என்ன சொன்னையடா குரங்குக் குட்டியே! ஊம்?
ஒ-ஒன்றுமில்லை பாஸ்!


நான் பொறுமையிழப்பதற்கு முன்னர் தொலைந்துபோ புழுப்பயலே!


முன்னாள் திருடனும் ஸ்பைடரின் இன்னாள் கூட்டாளியுமான ராய் ஆர்டினி, நொண்டிக்கொண்டே தன் எஜமானனின் பாழடைந்த இருப்பிடத்திலிருந்து வெளியேறினான்!
ஒரு பேச்சுக்கு சொன்னால், இப்படிக் கோபப் படுகிறாரே! எவனோ ஒரு பயல் ஸ்பைடரின் பெயரைச் சொல்லி, கொள்ளையடித்து வருகிறான்! கொடுத்து வைத்தவன்...
ஒருவேளை அது நம் பாஸாகவே இருக்குமோ? நல்லபிள்ளைபோல இருந்து கொண்டு விஷமம் செய் கிறாரோ?
அப்பொழுது...
ஹேய், என்ன இது? .. எனக்கும்கூட பார்சல் வருகிறதா, என்ன?


'பர பர' வென பார்சலைப் பிரித்தான் ஆர்டினி...
ஸ்-ஸ்பைடரின் உருவப் பொம்மை! ...என்னை எ-என்னவோ செய்யச் சொல்வது போலுள்ளதே!


திடீரென, பொம்மையை தன் கோட்டினுள் மறைத்துக் கொண்டு, உள்ளே சென்றான்!
ரைட்! மும்முரமாக வேறு வேலையிலுள்ளார்கள்! என்னைக் கவனிக்க மாட்டார்கள்!


கள்ளனைப்போல, நைசாக ஸ்பைடரின் தனியறையை நோக்கிச் சென்றான் ஆர்டினி...
ஹெ...ஹெ... இந்த அற்பப் பூட்டின் பலத்தையா நம்பியுள்ளார் ஸ்பைடர்? இனி வேடிக்கையைப் பாருங்கள்!


சரியாக ஐந்து வினாடிகளுக்குப் பின்...
ஹி! ஹி! ஹி! ராய் ஆர்டினியா கொக்கா?


ஹா, சவாலாக நினைத்து இந்தப் பூட்டோடும் மோதிப் பார்த்துவிட வேண்டும்...
.. ஸ்பைடரின் அற்புதக் கண்டு பிடிப்பை தகர்க்க முடிகிறதா பார்ப்போம்?!
ஆர்டினியின் கைவிரல்கள் நளினமாக செயல்பட்டன .. திடீரென ஒரு வலைப் பந்து அவனைத் தாக்கியது!
ஒவ்வொரு கோணத்திலிருந்தும், ஒவ்வொரு நூலிழை பீச்சிட்டது!
ஆ..!


ஒரு சில நொடிகளில், வலையில் சிக்கிய ஈயைப்போல பிணைக்கப் பட்டான் ஆர்டினி!
ஹலோ அருமை சகாவே! உன் எருமைக் கரங்களுக்கு இங்கு என்ன வேலையோ?!
ம்ம்ர்! ம்ம்ம்ப்!


ஓஹோ! பொம்மைகளுடன் விளையாட ஆரம்பித்துவிட்டதா குழந்தை? உன் ரசனையை பாராட்டத்தான் வேண்டும் ஆர்டினி!


ஆனல் அந்த சிறிய, கரிய உருவத்தில் ஏதோ சூது இருபபதை உணர்ந்தான் ஸ்பைடர்!
ம்ம் .. பொம்மையை சற்று சோதித்துப் பார்க்கலாம்!


மிஸ்டர் மடையரே! நான் வரும் வரை காத்தி ருங்கள் பொறுமையாக!
ம்ம்ப்ப் ..


ஹா! பொம்மையிலிருந்து ஒரு வகை வசிய அலைகள் வருகின்றன-பெல்ஹாம்! .. இந்த இயந்திரத்தின் பாதுகாப்பில் நாம் இருப்பதால் தப்பித்தோம்!
அப்படியானால் ஆர்டினி மதி மயங்கியதற்குக் காரணம் இதுதான்!


ஆர்டினியை விட்டுத் தள்ளுங்கள் புரபஸர்! அவன் சில்லறைப் புத்திக்கு சபலம் ஏற்படுவது வெகு சகஜம்!


அப்பொழுது...
ஆஹா! என் யூகம் சரிதான்! இந்த வசியப் பொம்மையை இயக்கும் மூலசக்தி சிறகுப் பாறை தேசீயப் பார்க்கில் மையம் கொண்டுள்ளது!
அதே இடத்தில் தானே ஒவ்வொரு ஏமாளியும் கண்டுபிடிக்கப்பட்டனர்?...
...நீங்களும் அங்கே ஒளிந்திருப்பதாகத்தான் பேப்பர்காரர்கள் சொல்கிறார்கள்!
அந்த மடையர்களின் கணிப்பு எவ்வளவு தவறானது என்பதை நிரூபித்துக் காட்டப்போகிறேன் பெல்ஹாம்!


அதேசமயம் சிறகுப்பாறை பார்க்கை ஒட்டியதொரு பெட்ரோல் பங்கில்...
வேரன்வைல் டைம்ஸ் எடிட்டரா?.. கவனமாகக் கேள் மிஸ்டர்!


...சிறகுப் பாறை பார்க்கில் ஸ்பைடர் தென்பட்டான்... பெட்ரோல் பங்கிற்குத் தெற்கே!
நிஜமாகவா?... ஹேய் உன் பெயர் என்ன?...அட ஃபோனை வைத்துவிட்டானே!


ஆசை தீரப் பேசி முடித்தாச்சா மிஸ்டர்?
வாயை மூடு பெண்ணே! மரியாதையாகப் பேசக் கற்றுக்கொள்!
அடச்சே! எருமை மாட்டுப் பேர்வழி!
தொலைபேசியைப் பயன்படுத்த முற்பட்டனர் இரு பெண்களும் ...ஆனால் அங்கு இருந்ததோ கருகி-உருகிப்போன உலோகம்!
ஆ...!


அதேசமயம் வேரன்வைல் டைம்ஸின் எடிட்டரான ஒலிவர், சிறகுப் பாறை போலீஸ் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டார்...
ஸ்பைடர் சிறகுப் பாறை பார்க்கில் இருப்பதாக செய்தி வந்தது கமிஷனர் சார்! அவனைப் பிடிக்க என்ன முயற்சி செய்துள்ளீர்கள்?
ஒ-ஒன்றும் செய்ய வில்லையே! ஸ்பைடரை இங்கு யாருமே பார்க்கவில்லையே!


ஸ்பைடரின் ஹெலி-காரை பெட்ரோல் பங்கிற்குத் தெற்காகப் பார்த்ததாக செய்தி வந்துள்ளது கமிஷனர்!
கொஞ்சம் பொறுங்கள் ஒலிவர்!


பொறுக்கவா? அந்தக் கரப்பான் பூச்சிப் பயலைப் பிடித்து இழுத்துவாருங்கள் கமிஷனர்!


தன் சகாக்களை வரவழைத்து, அன்றைய தலையங்கத்தை எழுத உததரவிட்டார்!
''நாட்டின் நலனிற்குக் கேடு விளைவிக்க திட் க்கும் இந்த கருப்புச் சட்டைக் கல் நெஞ்சக்கார ஸ்பைடரை கைது செய்வதையே, மக்களும் காவலரும் கடமையாகக் கருத வேண்டும்...''


அதே சமயம் பார்க்கில்...
இன்னும் இருநூறு அடி தள்ளித்தான் ஹெலி-கார் இறங்கியிருக்கவேண்டும்!


முன்னணியில் சென்ற மோட்டார் சைக்கிள்
காவலர் 'டமா'லென ஸ்பைடரின்
வலையோடு மோதினர்!


வலையிலிருந்து தப்ப
முடியவில்லை அவரால்!


சூழ்ந்து நின்ற போலீஸ் கார்களாலும் தப்ப இயலவில்லை!
ஹெக்! எங்கு பார்த்தாலும் வலையாக உள்ளது!


யாரையேனும் தேடுகிறீர்களா ஏமாளிகளே?...
அதோ ஸ்பைடர்! பிடியுங்கள் அவனை!


இந்த குற்ற அலைக்குப் பின்னிருக்கும் வில்லன், என் வருகையை போலீஸுக்குத் தெரிவித்திருப்பான் என்று யூகித்ததனால் இந்த ஏற்பாடு செய்ய முடிந்தது!


சரி, கொஞ்சம் பொழுதைப் போக்குவோம் போலீஸ்ாரோடு!


நயவஞ்சகப் பயலே நம்பாதீர்கள்! சுடுங்கள்!
ஹா! ஹா! ஹா! கண்ணாமூச்சு ஆடுவோம் வாரீர்களா?
டுமீல்!
டுமீல்!


இதோ போய் ஒளிந்துகொள் கிறேன்!


என் கணக்கு சரியாக இருக்குமாயின் இன்னும் ஐந்து நொடிகளில் அது நடக்கவேண்டும்!


ஓடிவாருங்கள் குந்தைகளா!
இதோ ஸ்பைடர்!
விடாதீர்கள், பிடியுங்கள்!


போலீஸார் ஸ்னைடரை நோக்கி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தனர்! ...ஆனால் அவர்களுக்குத் திடீரென
ஆ...! ஐயோ...!
...களிமண் அபிஷேகம் நடந்தது!


அருமை! ஆனால் உள்ளூர்ப் போலீஸாருக்குக்கூட, இந்த ஊற்றிலிருந்து பத்து நிமிடங்களுக்கு ஒருமுறை களிமண் கொப்பளிக்கும் என்பது தெரியவில்லையே!


அந்தக் களிமண் மனிதர்களை மொத்தமாக தன் வலையினால் கட்டி, இழுத்துச் சென்றான் ஸ்பைடர்!
ரைட், நீங்கள் இறங்கும் ஸ்டாப் வந்துவிட்டது பசங்களா... டாடா!


குற்றங்களை செய்துவரும் அசல் வில்லனை பிடிக்கும் பொறுப்பை என்னிடம் விட்டுவிடுங்கள்!
பொக்!



வசியஅலைகள் வெகு தீர்க்க மாக எழுவதால், அதன் மையத்தைக் கண்டுபிடிப்ப தில் சிரமம் இருக்காது!
வெகு துல்லியமாக தன் இலக்கை தேடிப் போனான்... தன் வரவை ஒரு ஜோடிக் கண்கள் கண்காணிக்கின்றன என்பதை அறியாமல்!
ஹெ ஹெ அருகே வா! ...உன் சாவைத் தேடி வா!
கதிர்வீச்சு எழுவது அந்தக் குகையில் இருந்துதான்! குற்றங்களை செய்து பழியை என் மீது போட்டுவரும் பாதகனை இனி கண்டுபிடிப்பதற்கு தடையேதுமில்லை!


ஹெலி-கார் தரையைத் தொட்டது! அதன் ஒரு சில இயக்கங்களை முடுக்கிவிட்ட பின்னர், வாயைத் திறந்துநின்ற அந்தக் குகையை நோக்கி நடந்தான் ஸ்பைடர்!
கந்தக நெடி குமட்டுகிறது! .. என் எதிரியின் இருப்பிடம் ரொம்பக் கண்றாவி!
பயங்கரக் குகையினுள் ஒரு எட்டு வைப்பதற்குள் பேரபாயம் தாக்கியது!
ஆ ஆ!
சட்!



வேங்கை போலப் பாய்ந்து தப்பினான் ஸ்பைடர்!
என் தலையை நசுக்க வந்த சனியனின் மீது ஏதோ எழுதியுள்ளதே!
தூசு படர்ந்த எழுத்துக்களைக் குனிந்து படித்த ஸ்பைடரின் இரத்தம் கொதித்தது!
இனி முன்னே செல்லும் எவர்க்கும் இது ஒரு எச்சரிக்கை! குறிப்பாக ஸ்பைடருக்கு! என் பாதாள இராஜ்ஜியத்தின் சாகாவரம் பெற்ற காவலர்களை தாண்டி வர முடிந்தால் வா!... உன் அழிவைத் தேடி வா!
ஆத்திரத்தில் கல்லை விசிறியடித்தான் ஸ்பைடர்! எச்சரிக்கைக்கு அவன் காட்டிய மரியாதை அதுதான்!
உன் சவாலை ஏற்று சாகா வரம்பெற்ற உன் காவலர்களையும் சந்திக்க வருகிறேன்!
டமால்!

## அத்தியாயம் 2 : பயங்கரக் குகை!







கேள்விக்கு விடையளிக்கும் வகையில் காதைப் பிளக்கும் ஓலமொன்று ஒலித்தது!
ஆஆஹ்! காட்டுக் கூச்சல் போட்டு என்னை செவிடாக்க நினைக்கின்றனவா இங்குள்ள சனியன்கள்!
கர்ர்!


ஓலம் வந்த திசையை நோக்கித் திரும்பிய ஸ்பைடரின் முதுகுத் தண்டு ஜில்லிட்டுப்போனது!


மூன்று தலை நாயின் மூன்று தலைகளும், ஸ்பைடரின் ஒரு தலையைக் கொய்வதிலேயே குறியாய் இருந்தன!
லொள்!
சங்கிலியின் பிணைப்பிலிருந்து திமிறிப் பாய்ந்த அந்த பயங்கர ஜன்மம், ஸ்பைடரின் பிடறியில் ஓங்கி அறைந்தது!


ஆ...!


மூன்று ஜோடிப் பல்வரிசைகள்
முன்வந்தன...
ஆண்டவனே! நாய் ரொட்டியின் கதிதானா இந்தக் குற்றச் சக்கரவர்த்திக்கும்?



மின்னல் வேகத்தில் புரண்டு, கொடூரப் பற்களுக்குப் பாச்சா காட்டிப் பிழைத்தான்!
பாழும் குகையின் மையத்தை எட்டிப்பிடிக்க வேண்டுமாயின் இந்த மூன்று தலை முண்டத்தை தூங்கச் செய்ய வேண்டும்... இதோ...!
புஸ்!
ஸ்பைடரின் தூக்க வாயு வினால் இரண்டு தலைகள் தூங்க ஆரம்பித்தன...
தூங்கப் போங்கள் கண்ணுகளா!


தள்ளாடித் தடுமாறி, குகையின் மூலையில் ஒரு வழியாக விழுந்தது அந்த நாய்!
நாயைக் கடந்துதான் மேலே செல்ல முடியும்!


சப்தமின்றி நாயைத் தாண்ட முற்பட்டபோது நடுவிலிருந்த மண்டை மட்டும் குரைத்தது!
வவ்! இவ்வளவு தூக்க வாயு செலுத்தியும் இந்த மண்டை சுதாரித்து நிற்கிறதே!
கர்ர்ர்


இராட்சஸ நாயின் தாடைகளை 'லபக்'கென இறுக்கி, திணறச் செய்தான் ஸ்பைடர்...
நல்ல நாய்க் குட்டியாம்! ஸ்பைடர் சொன்னால் கேட்குமாம்!


ஆத்திரத்தில் திமிறிப் பார்த்தது அந்த நடுமண்டை! ஆனால் ஸ்பைடர் விடுவதாக இல்லை!
க்ர்ர்ர் ர்ர்ர்


நாயின் முதுகில் ஏறி, அடுத்த குகைக்குள் குதித்துத் தப்பினான் ஸ்பைடர் ..
மடச் சாம்பிராணிகளா! .. உங்கள் எஜமானனை சந்தித்துவிட்டு வருகிறேன்!


சாகாவரம் பெற்ற காவலர்களா இவை..? ஹி ஹி ஹி !


கொஞ்ச தூரம் சென்ற பின்னர் ஸ்பைடரின் எதிரே தோன்றியது ஒரு பயங்கர நீர்வீழ்ச்சி!
ஹும், இதுதான் அடுத்த தடையோ?


அப்பொழுது நீரோடையின் ஓரத்திலிருந்து வந்த வெளிச்சம் ஸ்பைடரின் கவனத்தை ஈர்த்தது...
அடி சக்கை! நீரோடையைக் கடப்பதற்கு ஒரு ஏற்பாடா!


கிழட்டுப் படகோட்டியால் தீங்கேதும் வர வாய்ப்பில்லையென்று நினைத்தவாறு...
படகு என்ற பெயரில் நடமாடும் இந்தப் பலகைக் குவியல் வாடகைக்கு வருமா பெரியவரே?
ஓஓ... வாருங்கள் வாருங்கள்!
தண்ணீரைத் தொடாதீர்கள் நண்பரே! ...தொட்டால் பஸ்பமாக்கி விடும் உங்களை!


நிதானமாகச் செல்! எதிரே நீர் சுழித்து ஓடுகிறது! ..


ஆனால்—
.. காது கேட்க வில்லையா கிழவா? .. இருவரும் செத்துத் தொலையப் போகிறோம்!
எனக்கு சாவே கிடையாது என்பது மறந்துவிட்டதா நண்பனே?
புஸ்! புஸ்! புஸ்!



.. படகின் வாடகையைக் கொடுக்கும் வரை நீயும் அழியப்போவதில்லை!
ஆல்ரைட்.. படகின் வாடகை என்ன?
உன உயிர்! ..அதுவே எனக்குத் தேவை!
ஹா! அதற்கு உனக்கு வயசு போதாது முண்டம்!


ஹெ! ஹெ! ஹெ!
மடையா! என்னைத் தாக்குவதன் மூலம் நீ உயிர் தப்ப முடியாது!


கொப்பளிக்கும் அமில ஆற்றில் விழுந்தான் கிழவன்!
குட்லக்! கருப்புச் சட்டை சண்டாளா!
துடுப்பு ஐயோ படகு விலகிச் செல்கிறதே!


துடுப்பும் கிடையாது! படகை கட்டுப்படுத்த விசையும் கிடையாது! பலியாகக் காத்திருக்கும் அமில ஆறே, ஆக்ரோஷமாய் ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்தது!


எப்படியும் ஸ்பைடரை அழித்துவிட்டுத்தான் மறுவேலை செய்வது என்பதில் தீவிரமாய் இருந்தது ஆறு!
ஊதாரியின் பணப் பையைப் போல் படகு ஒழுகுகிறது!


வலை மன்னன் மேல் நோக்கிப் பார்த்தான்...
இன்னும் சிறிது தூரத்தில் குகை முடிவு பெறுகிறது! .. எப்படியும் அந்தக் கிழவன் முகத்தில் கரிபூசியே தீருவேன்!


படகு மூழ்கிய சமயம், ஸ்பைடர் தன் முதுகிலிருந்த 'ஜெட்'ஐ இயக்கினன்...
ஹா! ஹா! பாதாளக் காவலர்களே, நிஜமாகவே சாவே இல்லாதவன் இந்த ஸ்பைடர் தான் என் பதை புரிந்து கொள்ளுங்கள்!



கொலைகார எரியிலிருந்து தப்பிய பெருமிதத்தில உயரே பறந்தான் ஸ்பைடர்...
இனி இந்தப் பாதாளப் பாசறையை ஆக்ரமிக்கும் பாதகனை தேடவேண்டும்!
ஆனால்--
அம்மாடி! இது என்ன புதுத் தொல்லை?
நிலைகுலைந்து போனான் ஸ்பைடர்!
இத்தனை வலுவுடன் தாக்கியது என்னவாக இருக்கும்?


சுதாரித்துக்கொண்டு எழும்பிய ஸ்பைடருக்கு விடை கிடைத்தது ...
இராட்சஸப் பறவையா இம்முறை...? அலகும் நகமும் பயங்கரமாக உள்ளனவே!


தன் கரிய இரை தப்பி ஓடும் என்று எண்ணிய அந்தப் பருந்து பாய்ந்து வந்தது. ஆனால் ஸ்பைடரோ, பறவையை நோக்கிப் பாய்ந்தான்...!


கோபத்தில் தன் இராட்சஸ இறகுகளை 'பட பட'வென
அடித்தது பறவை! சிதறி விழுந்த அதன் இறகுகள்..
பட்!
பட்!


ஸ்பைடரின் தோள்களில்
அம்புகள்போல் பாய்ந்தன!
ஐயோ!


தரையை நோக்கி வலை-மன்னன்
விழுந்த பொழுதிலும்...
சொய்ங்!


தன் வலைத் துப்பாக்கியிலிருந்து எஃகுப்போன்றதொரு
வலையை உருவாக்கிக் கொண்டான்!
தொப்!


பின்னர் வலைத் துப்பாக்கி மீண்டும் முழங்க, இரு பருந்துகளும் வலையில் மாட்டிக்கொண்டன!
ஆவ்!
கிரீச்!


ஆனால் நொடிப் பொழுதில் வலையின் பிடியிலிருந்து திமிறிக்கொண்டு, தம் இரையை தீவிரமாய்த் தேடின!
விடை பெறுகிறேன் சனியன்களே!


ஆஹா! அடர்ந்த கானகப் பகுதி! அந்தப் பருந்துகளின் பார்வையில் படாமல் பதுங்கிக் கொள்ளலாம்!


இராட்சஸ இறகுகள் ஏற்படுத்திய காயம் குணமாக இந்த மருந்து பயன்படும்!


அடுத்து என்ன தொல்லை ஏற்படுமோ என்ற எண்ணம் மனதில் மேலோங்க ஸ்பைடர் மெல்ல முன்னேறினான் ...திடீரென—
ஆண்டவனே, பூமியே நடுங்குகிறதே!


உஷாராக புதர் மறைவிலிருந்து எட்டிப் பார்த்தான் ஸ்பைடர்...
நாசமாய்ப் போச்சு! இது என்ன கொடூரம்?!


பாம்புபோல் நெளிந்துகொண்டிருந்த அந்த இராட்சஸத் தலைகள் ஸ்பைடரைப் பார்த்துவிட்டன...
ஒரே நேரத்தில் அத்தனை தலைகளும் என்னைக் குதறப் பார்க்கின்றனவா?


நம்பிக்கையின்றி, தன் தூக்க வாயுத் துப்பாக்கியை பயன்படுத்தினான் ஸ்பைடர்!
பாஹ்! புத்தி மழுங்கிய இந்த முண்டத்தை, என் அதி நவீனக் கருவிகள் பாதிக்காது போலும்!...


துருத்திக்கொண்டிருந்த தலையொன்று மின்னல் வேகத்தில் பாய்ந்தது!
லபக்!
இந்த பாதாள இராஜ்யத்தில் எல்லா விலங்குகளும் பட்டினிதான் போலும்! கொஞ்சம் அசந்தால் கையை காலைத் தின்றுவிடும் போலிருக்கிறதே!
ஐயோ
அடுத்த தாக்குதலுக்கு, உஷாராக அனைத்துத் தலைகளையும் கவனித்தான் ஸ்பைடர்! . தீப்பிழம்புகள் அப்பொழுது சீறிக்கொண்டு வந்தன..!


தப்ப முனைந்த ஸ்பைடர், சேற்றுப் பகுதியினுள் விழுந்தான்!
இந்த நடமாடும் சைத்தானோடு விளையாடிக் கொண்டிருக்க நேரமில்லை!


ஆனால்
சே-சேற்றில் சிக்கிக் கொண்டேன்! என்னை கீழே இழுக்கிறது !


ஸ்பைடரின் விந்தைத் துப்பாக்கியிலிருந்து
சீறிப் பாய்ந்தது அற்புத வலை!
இதிலிருந்து தப்பித்துப் பாருங்கள் மரமண்டைகளா!
டம்!


நொடிப் பொழுதில் வலையின்
தடை யை தகர்த்தெறிந்தது
அந்த இராட்சஸ ஜந்து ..
ஐயையோ! இந்தச் சைத்தானை தடுக்க வழியே கிடையாதா?


முன்னணியிலிருந்தொரு மண்டை மூர்க்கத்தனமாய் ஸ்பைடரை குதற முற்பட்டது...
ஆ.. ஆ!
தன் ஜெட் இயக்கத்தைப் பயன்படுத்தித் தப்பலாமென எண்ணியபோது ..
இந்தச் சேறு என் ஜெட் இயக்கத்தையும் பழுதாக்கி விட்டது!
இனி தப்புவதற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது!


வலைத் துப்பாக்கியிலிருந்து மெல்லிய நூலிழை மரக் கிளையில் சிக்கிக்கொண்டது!
ஐயோ பாவம்! சனியன் ஏமாந்து போனது!
ஆனால் அந்த இராட்சஸ விலங்கோ நெருங்கியது
இந்த ஒன்பது மண்டை சைத்தானுக்கு அகோரப் பசி போலும்!
மீண்டும் ஒருமுறை ஸ்பைடரின் வலைத் துப்பாக்கி முழங்கியது! இம்முறை ஒரு முட் -புதரில் அது சிக்கியது!
இனி சிலந்திகள் எப்படிப் பயண மாகும் என்பதை இந்தப் பதினெட் டுக் கண் ஜந்து பார்க்கப் போகிறது!


கைதேர்ந்த சர்க்கஸ் வித்தையாளனைப் போல வலை மீது ஓடினான் ஸ்பைடர்!


சேற்றைக் கிழித்துக்கொண்டு வந்த விலங்கோ நெருப்பைக் கக்கிக்கொண்டே விரட்டியது!
உர்ர்ர்ர்!
க்க்ர்ர்ர்!


என் கூட்டாளிகள்-
பெல்ஹாமும் ஆர்டி
னியும் என்னுடன்
வராமல் போனது
ரொம்ப நல்லது!
இந்த விலங்கைப்
பார்த்திருந்தால்
மூர்ச்சை ஆகி
யிருப்பர்
இருவரும்!


அதேசமயம் தூரத்து
இருப்பிடத்தில்—
ஸ்பைடரை
ரொம்ப நேரமாய்க் காண
வில்லை ஆர்டினி!
இதோ உன்னை
விடுவிக்கிறேன்!
ஏதாவது சிக்கலில்
மாட்டியிருப்பாரோ?
நாம உடனடியாக
அவருடன் தொடர்பு
கொள்ள வேண்டும்
புரபஸர்!

## அத்தியாயம் 3 : பயங்கரப் படலம்!







ஸ்பைடரின் ஹெலி-காரிலிருந்து எழுந்த சமிக்ஞை
களைப் பின்தொடர்ந்து இரு சகாக்களும் விரைந்தனர்!
விர்ர்ர்...


ஆனால் அவர்களது வருகை கவனிக்கப்படாமல்
போகவில்லை! குகைகளின் மையத்தில், எரியும்
கந்தகத்தினிடையே அமர்ந்திருந்த குற்றத் தலைவன்
நெமோவின் கூரிய காதுகளில் விழுந்தது ஹெலி-
காரின் ஓசை!
ஆஆஹ்! லேசான ஆனால் தீர்க்கமான அதிர்வு கேட்கிறதே!


அப்படியானால், அந்நியப் பயல் எவனோ இந்த இருண்ட இராஜ்யத்தை நோக்கி வருகிறான் என்று புரிகிறது!
ஆஹா! அந்நியர்களைப் பார்த்துவிட்டேன்! அவர்களது வாகனத்தைப் பார்க்கும்பொழுது, என் இராஜ்யத்தினுள் சிக்கியுள்ள சிலந்திப் பயலின் கூட்டாளிகள் இவர்கள் என்பது தெரிகிறது!


ராஜ வரவேற்பு காத்திருக் கிறது மடையர்களுக்கு! ..ஹெ ..ஹெ .!
ஹா! ஹா! ஹி! ஹி!
காத்திருக்கும் அபாயத்தை உணராது பெல்ஹாமும் ஆர்டினியும் தரையிறங்கத் தயாராயினர்...
அதோ. தலைவரின் ஹெலி-கார்! அதனருகில் நாம் இறங்கலாம் புரபஸர்!


ஹெலி-காரின் கால்கள் மணல் பரப்பின்
மீது மெலிதாகப் பட்ட மறுகணம்—
ஆஆஹ்! இன்னும் கீழேயே போகிறோம்!


அத்தனை அபாயகரமான சூழலிலும் ஒருவருக்
கொருவரை திட்டிக்கொள்ள நேரம்
கிடைத்தது இரு கூட்டாளிகளுக்கும்!
எல்லாம் உன்னால் வந்த வினையடா தடியா! நல்ல இடம் பார்த்தாய் நாம் இறங்குவதற்கு!
வண்டியை ஓட்டி வந்தது நீ தானே மடையா!


ஜெட் இயக்கத்தைப் பயன்படுத்தி மேலே பறந்து செல்ல முடியாதா?
அதை அப்பொழுதே செய்து பார்த்துவிட்டேன். அனைத்து இயக்கங்களும் சிக்கிக் கொண்டுள்ளன!


ஏதாவது நாலு காசு கிடைக்கும் என்ற எண்ணத்தில் இங்கு வந்தேன் .. இதிலிருந்து மட்டும் தப்பித்துவிட்டால் இனி ஆயுசுக்கும் திருட மாட்டேன்! ...இது சத்தியம்!



அப்பொழுது சிறியதொரு அதிர்வுடன் ஹெலி-காரின் பயணம் முடிவுற்றது!
நிதானம், ஆர்டினி! வெளியிலுள்ள சூழலைப் பரிசோதிக்கும் முன்னர் எதுவும் சொல்வதற்கில்லை!
அப்பாடி! ஒரு வழியாக சனியன் நின்று விட்டது . நமக்கும் ஒன்றும் ஆகவில்லை!
காற்றழுத்தம் மற்றும் வெப்ப நிலைக்கான சோதனைகளை பெல்ஹாம் துவக்கும் முன்னர், ஹெலிகாரின் கண்ணாடிக் கூண்டின் மீது சிறு முஷ்டிகள் முழங்கின!
வெளியே வாருங்கள்! என் புதிய நண்பர்களையெல்லாம் அறிமுகப்படுத்தி வைக்கிறேன்!
தட்! தட்!
ப-பாஸ்! ...ஸ்பைடர்!


கொ-கொஞ்சம் குட்டையாகிவிட்டீர்கள் போலத் தெரிகிறது பாஸ் என்னவாயிற்று ?
உங்களிருவரையும் சந்திப்பதற்காக ஸ்பைடர் நேரில் வருவார் என்று எதிர்பார்த்தீர்களா மடையர்களே? நான் உங்களை சந்திக்க வந்துள்ள உருவப் பொம்மை மட்டுமே!


இ-இந்த பொம்மை சொல்வதை நம்புவதா கூடாதா?...
பாஹ்! எந்நேரமும் சந்தேகம்தானா புரபஸர்? அதன் குரல் ஸ்பைடரின் குரல் போலவே உள்ளது .. வாருங்கள்!
தொணதொணக்காமல் வாருங்கள்!


சிறிய, கரிய உருவத்தைப் பின்தொடர்ந்து இருவரும் சென்றனர்...
ஹேய் புரபஸர்! நம்மை சந்திக்கக் காத்திருக்கும் நண்பர்களைப் பார்த்தீர்களா?


எமது விருந்தில் நீங்களும் கலந்துகொள்ள வேண்டும்!
ஆ-ஆனால் ஸ்பைடர் எங்கே காணவில்லையே?
ஓ, அதுவா? கொஞ்ச நேரம் கழித்து வருவார் ஸ்பைடர்!


நம்மை அங்கே விட்டுவிட்டு, இங்கே உல்லாசமாக இருந்திருக்கிறார் பாஸ்!?
எனக்கென்னவோ ஸ்பைடரைப் பார்த்தால்தான் நிம்மதி!
அனைத்து நிகழ்ச்சிகளையும் நெமோவின் குரூரக் கண்கள் பார்வையிட்டு வந்தன ..
அந்நேரம் ஸ்பைடருக்கும் அவனது தடியர்களுக்கும் ஒன்றாக சமாதி கட்டிவிடலாம்!
ஹா! ஹா! இதோ அசல் ஸ்பைடர் வரு கிறான்! தன் கூட் டாளிகளைச் சந்திக் கப் போகிறான்!



ஹலோ, பாஸ்! நாங்கள் இங்கே இருக்கிறோம்
சொகுசாகச் சுற்றித் திரிகிறீர்களா சுண்டைக்காய்களா?.. இது உங்களுக்கு விரிக்கப்பட்ட வலையென்பதோ, உணவில் வசிய மருந்தோ, விஷமோ கலந்திருக்கக் கூடும் என்பதோ புரியவில்லையா ..?
சும்மா பேத்தாதீர்கள் பாஸ்...!


விஷமா? வசிய மருந்தா? சே.. சே...


தன்னை வலுக்கட்டாயமாய் இட்டுச் செல்லும் இளம் பெண்மணிகளின் பலத்தைக் கண்டு வியந்தான் ஸ்பைடர்...
வாருங்கள் எமது ராணி உங்களை சந்திக்க ஆவலாய் உள்ளார்!


செய்வதறியாது திகைத்த ஸ்பைடரின் முன்னால் பவனி வந்தாள் தலைமைப் பெண்மணி! மின்னல் வேகத்தில் அவளது இடது கை செயல்பட்டது!
ஆஹா! பயலை கண்டதுண்டமாய் வெட்டிப்போட நல்ல சந்தர்ப்பம்!


பளபளக்கும் கூரிய வாள் ஒன்று ஸ்பைடரின் நெஞ்சை இலக்காகக் கொண்டு, பாய்ந்து வந்தது!
ஆ ஆவ்! இவர்கள் பெண்களா ...அல்லது பேய் பிசாசுகளா?!


தர்மதமாய் உஷாரான பெல்ஹாமும்
ஆர்டினியும் தம் உயிருக்காகப் போராடினர்-
என் உயிரை பிடுங்கும் முன் ஓடிப்போக வேண்டும்!
ஊஊ! காப்பாற்றுங்கள் புர்பஸர்!


ஸ்பைடர், தன் சகாக்களைப் போல கோழையல்ல ..
என் வழியிலிருந்து விலகு மோகினிப் பிசாசே!


ஸ்பைடரின் வலிமையான கரங்களின் பிடியில் சிக்கிய பெல்ட் கழன்றுவிட்டது...


அதே சமயம், பெல்ஹாமும் ஆர்டினியும் சாவை சந்திக்கத் தயாராகினர் ..
ஆ ஆ! வேண்டாம்... அழகானதொரு வாலிபனை அநியாயமாய்க் கொன்ற பாவம் உங்களுக்கு வேண்டாம்!


.. அப்பொழுது ஸ்பைடரின் விரல்கள் தற்செயலாய் பெல்ட்டின் மைய உலோகத்தை அழுத்த ..
ஐயோ!


..அந்த அல்லி இராஜ்யமே திடீரென
காற்றில் கரைந்துபோனது!


எ-என்ன
நடந்தது?
பீடைகள்
ஒழிந்தன என்று
நிம்மதியாய் இரு!
இந்த உலோகத்தில்தான்
அவைகளின் சக்தியிருந்தது
போலும்! அதனை அழுத்திய
வுடன் அனைத்தும்
தொலைந்துவிட்டன!


இந்தப் பழங்கள்
அப்படியேதான் உள்ளன!
நல்ல வேளை தான்!


சொய்ய்ங்!


ய-யார் இவர்கள்?
உன் கண்களென்ன பிடறியிலா உள்ளன ஆர்டினி?... இவர்கள் தான் சென்டார் எனப் படும் குதிரை-மனிதர்கள்!


...பழங்கதைகளில் வரும் இந்த சென்டார்கள் மிகக் கொடூரமானவை! ...ஓடுங்கள்!


உங்கள் வலைத் துப்பாக்கியால், தடிப் பயல்களைக் கட்டினால் என்ன ?
அதெல்லாம் ஏற்கனவே முயற்சி செய்து பார்த்து விட்டேன்! இந்தப் பாதாளக் காவலர்கள், பஞ்சு மிட்டாயைப் போல என் வலையை தகர்த் தெறிந்துவிடுகின்றன!
தூக்க வாயுவை பயன்படுத்தினால் ?


உனக்குப் பித்துப் பிடித்துவிட்டதா முட்டாள்?... தூக்க வாயுவை பாய்ச்சும் அளவிற்கு நாம் அருகே சென்றால், மறுகணம் துளைத்துவிடுவார்கள் உடலை!


இந்தப் பாலத்தை மட்டும் கடந்துவிட்டால் நாம் தப்பிவிடலாம் புரபஸர்!
எ-என்னால் ஓட முடிய வில்லை . !
அம்மா.. என் தலையெல்லாம் சுற்றுகிறது!
சுறுசுறுப்பாய் நீ செயல்படாவிட்டால் சற்று நேரத்தில் உன் தலையே இராது!


இந்தக் குதிரைப் பயல்களை
நான் சமாளிக்கும் வரையில்,
இந்தப் பாறையின் பின்னால்
பதுங்கிக் கொள்ளுங்கள்
அற்பர்களே!


தலைவரின் திட்டம்
என்னவாக இருந்தாலும்
உடனே செயல்படவேண்டும்!


திடீரென அந்தக் கரும்பாறை அதளபாதாளத்தை நோக்கிப் பாய்ந்தது- ஸ்பைடரின் எஃகுப் போன்ற வலையிழைகளை தன்னுடன் இழுத்துச் சென்றவாறே!
இனி இந்த பேர்வழிகள் எப்படி தப்பிக்கும்?!
பலத்த ஓசையுடன் விழுந்த பாறை, தன்னோடு பாலத்தின் ஒரு பகுதியையும் கட்டி இழுத்துச் சென்றது!
டமால்!


அற்புத சாதனை ஸ்பைடர்!
ஆமாம், ஆமாம்! இது ரொம்ப நல்ல யோசனை பாஸ்!
உங்களுக்கும் சேர்த்துஅல்லவா நான் யோசிக்க வேண்டியுள்ளது மூடர்களே!
திடீரென நடுங்கும் குரலொன்று குறுக்கிட்டது-
அடுத்த பாலத்தை எப்படிக் கடப்பது என்பது பற்றி சற்றேனும் சிந்தித்தீர்களா ?
நீ யாரடா புதுக் கிழவா ?


இந்த அற்பப் பாலத்தை தாண்டுவதில் என்ன தொல்லை ஏற்படக்கூடும்?
எங்களது பாதாள இராஜ்யத்தின் தலைவர் நெமோவை சந்திக்க இந்த பாலத்தை கடந்தாகவேண்டும் அதற்குமுன் என்னை நீ சந்தித் தாக வேண்டும்!
உன் தாடி மேல் ஆசை யிருந்தால் விலகி நில்! இல்லையேல் உன் தாடி யாலேயே கழுத்தை நெறித்து விடுவேன்!
வெறும் பேச்சல்ல மடையா நான் சொல்வது!
அப்படியா? சாகாவரம் பெற்ற இந்த படுகிழவனிடம் உன் ஜம்பம் பலிக்கிறதாவென பார்ப்போம் வா!


சீ, விலகிச் செல்லடா கிழவா!
...டேய் ஆர்டினி இவனைக் கொஞ்சம் கவனி!


அப்பொழுதுதான் தனது முதிய எதிரியிடம் ஒரு பயங்கர மாறுதல் ஏற்படுவதை உணர்ந்தான் ஸ்பைடர்...
ஜா-ஜாக்கிரதை ஸ்பைடர்! . என்னவோ சூது உள்ளது!


அப்பப்பா பயங்கரமான மாறுதல்! இராட்சஸ மனிதக் குரங்கொன்றின் பிடியில் மாட்டிக்கொண்டான் ஸ்பைடர்!
ஆ ஆ!


தனது அசுர பலத்தை ஒன்றுதிரட்டி, வலை-மன்னன் அந்தப் பயங்கர உருவத்தை எட்டித் தள்ளினான்! ஆனால்...


.. மனிதக் குரங்கின் இடத்தில், அதைவிடப் பயங்கரமானதொரு ஜந்து உருப்பெற்றது!
அதிர்ஷ்டவசமாக, என் உடுப்பு, இந்த சைத்தானின் அழுத்தத்தைத் தாங்கிக் கொள்கிறது! ..ஹேய் மந்திரக் கிழவா, உன் வித்தை என்னிடம் பலிக்காது!


கிழவன் விட்டுக்கொடுக்கத் தயாரில் இல்லை...
மீண்டும் உருமாறுகிறான் புரபஸர்!
இம்முறை எந்த உருவமோ?


வவ்! சிங்க உருவம்! இம்முறை ஸ்பைடர் தப்பிவிட்டால் பெரும் அதிசயம்!


ஆனால் ஸ்பைடர் சளைத்தவனல்ல! சிங்கத்தின் தாடை மீது தன் கனத்த முஷ்டிகளை 'விண்'என இறக்கினான்!
சமர்த்தாய் வீட்டுக்குப் போய் பால் குடிடா கண்ணு! அது ஆபத்தற்ற வேலை!


'படக்'கென அடுத்த உருவம் எடுத்தான் அந்த அதிசயக் கிழவன் ..
உன் முஷ்டிப் பிரயோகத்திற்கு இதோ பரிசு!
தலைவரை காப்பாற்ற நான் உதவு கிறேன்...
உங்களுக்குப் பைத்தியமா புரபஸர்? அந்த மாமிச மலை நம் அனைவரையும் சுண்டு விரலால் நசுக்கிவிடும்!
கொஞ்சம் பொறு ஆர்டினி! அணுசக்தியைச் சுருக்கும் இந்தக் கருவியைக் கொண்டு செயற்கையாக உருமாற்றப் பட்ட எந்த பொருளையும் கரைக்க முடியும் பார்!...
மர்மமானதொரு கதிர் அக் கருவியிலிருந்து கிளம்ப, இராட்சஸ உருவம் மறையத் தொடங்கியது!
ஆ ஆஹ்!
நன்றி புரபஸர்!


நன்ருகவே இந்தக் கதிர் செயல்படுகிறது! நம் சுண் டைக்காய் பயலை என்ன செய்யலாம்?
ஐயோ, என்னை இன்னும் சிறிதாக்கி விடாதீர்கள்!


மறுகணம்—
ஹா! ஹா! ஓடு உன் தலைவனிடம்! ஸ்பைடர் மாமா உங்களையும் இதே போல நசுக்கப்போகிருர் என்று அவனிடம் சொல்!

## அத்தியாயம் 4 : இறுதிப் போராட்டம்!







மூளையில்லாதவனே!...இந்தப் பாதாளப் போராட்டத்தில் பங்கேற்க உன்னை யாரும் அழைக்கவில்லையே! நீயாக வந்தாய்... இனி முடிந்தால் நீயே தப்பிச் செல்!
ஆ-ஆனால் பாஸ்! நீ-நீங்களும்...


என் பெயரைப் பயன்படுத்தி, தன் குற்றச் செயல்களை நடத்திவரும் பாதகன் நெமோவை நீதியின் பிடியில் சிக்கவைக்கும்வரை இங்கிருந்து அகல மாட்டேன்! புரிகிறதா?
ஓ...புரிகிறது ப-பாஸ்!


திடீரென...
எ-என்ன
சத்தம் ?
விரைவில்
தெரியும்!


ஒடுங்கிய குகை வாயிலை அடைந்தனர் மூவரும்...
அந்தப் பாறைகளைப் பாருங்கள்
பல சிற்பங்கள் வடிக்கப்
பட்டுள்ளன!


இதைப் பார்! சற்று முன்னர் நாம் சந்தித்த இராட்சதனின் சிலை!
மிக அருமை யாகத்தான் உள்ளது!
பா-பா-பாஸ்... அ-அங்கே தீ மூட்டத் திற்கருகே ஏதோ அசை கிறது!
கோரமானதொரு கிழப் பெண்ணின் முதுகுப்புறம் மட்டுமே தெரிந்தது .. மெல்ல அவள் திரும்பினாள்...
ஸ்பைடர்! நம்மை நோக்கி அவள் திரும்பும்பொழுது, குகையின் சுவரெல்லாம் அதிர்கிறதே!?


அந்தக் கதிர்-திருப்பியை இப்படிக் கொடுங்கள் பெல்ஹாம்! இல்லையேல் ஒரே கணத்தில் நாம் கல்லாகிப் போவோம்!


'விர்'ரென்ற சப்தத்துடன் அந்தக் கருவி இயங்கியது. அந்தக் கிழவியோ தன் கொடூரப் பார்வையை மூவர் மீதும் திருப்பினாள்!
யா-யார் அது ஸ்பைடர்?
பார்க்க சூன்யக்காரி போலத் தோன்றுகிறாளே!
விர்ர்...!


கிழவியின் கண்களிலிருந்து கிளம்பியது கதிர்... மனிதர்களைக் கல்லாக்கும் கதிர்! ஆனால் ஸ்பைடரின் கையிலிருந்த கதிர்-திருப்பி கதிர்களின் தாக்குதலை தடுத்தது!
ஷ்ஷ்!
தன் புதுமைக் கருவியை உச்ச வேகத்திற்கு இயக்கினான் ஸ்பைடர். கண்களிலிருந்து வெளிப்பட்ட கதிர், வந்த வேகத்திலேயே திருப்பப்பட்டது!
ஆஆ!
ஹா! இனி உன் பார்வையாலேயே நீ அழியப் போகிறாய்!
ஸ்ஸ்ஸ்...


மறுகணம்—
இந்தக் கருவியை மட்டும் தக்க சமயத்தில் பயன்படுத்தியிராவிட்டால் நாம் அனைவரும் கல்லாகி யிருப்போம்
அப்பப்பா, என்ன பயங்கரம்!
ஸ்பைடர் தன் திறமையை நிரூபித்துவிட்டான்! இருந் தாலும் பயலை நான் விடப்போவதில்லை!
சூன்யக்காரியை முறியடித்துவிட்டு, வளைந்துசென்ற குகைப் பாதையில் அடியெடுத்தான் ஸ்பைடர்...
இனி என்ன செய்வது?
நேரே செல்ல வேண்டியதுதான்!


ஒரு சில இருண்ட நிமிடங்களுக்குப் பின்னர்—
இத்தனை பாதைகளில் எந்தப் பாதையை தேர்ந்தெடுப்பது ஸ்பைடர்?
எல்லாப் பாதைகளையும் சோதிக்கவேண்டும்! ...எப்படியும் அந்த நெமோவை நசுக்கிவிட்டுத்தான் மறுவேலை!


ஸ்பைடர் சென்ற முதல் பாதை மீண்டும் கிளை பிரிந்தது ..
ஒழுங்காகத் திரும்பி வீட்டுக்குச் சென்றிருக்கலாம்!
எனக்குக் கிறுகிறுப்பு வருகிறது!


ஆனால் திரும்பச் செல்ல வழியில்லை! ஏனெனில்...
ஸ்-ஸ்பைடர் நம்மை நோக்கி ஒரு அசுரன் வருகிறான்!


இ-இந்தப் பக்கமும் ஒன்று வருகிறது!


ஸ்பைடர் தனது டார்ச்சை ஒவ்வொரு குகையினிலும் அடித்துப் பார்த்தான்... ஒவ்வொன்றிலும் ஒரு கொடூரம் காத்திருந்தது!
வகையாய் மர்ட்டிக் கொண்டோம்!
ஒரு டஜன் சைத்தான்கள் காத்திருக்கின்றன!


பதறாதீர்கள் சகாக்களே! இருப்பது ஒரு பூதம் தான்!


கனத்த கல் ஒன்றை ஓங்கி ஒரு குகையை நோக்கி வீசினான் ஸ்பைடர்! பலன்—பலத்ததொரு சிதறல்!
ஒரு பூதம்... ஆனால் பல கண்ணாடிகள்!


எல்லாம் சரிதான் பாஸ்!
ஆ-ஆனால் அந்த ஒரு பூதம்
நம்மை நோக்கி வ-வருகிறது!


நிற்காதீர்கள்
முண்டங்களா!...
ஓடுங்கள்!
விஷ்!


ஆனால்...
எங்கே பார்த்தாலும் கண்ணாடியாய் உள்ளதே! எப்படித் தப்புவது?
வாயை மூடிக் கொண்டிருமய்யா!
ஆஆஹ்ற! என் பொறியில் சிக்கிக்கொண்ட சிறு எலிகளே, வணக்கம்!
104


டமார்!
இனி சாகுங்கள்! ஊ ஊப்!
ஆஆ!


பாவம்! நம் நண்பன் ஏமாந்துபோனான்! நிழலை நிஜமென்று நம்பிவிட்டான்!


அவன் விரித்த வலையே அவனுக்குப் பாதகமாய் அமைந்துவிட்டதைப் பார்த்தீர்களா?
ஹா! ஹா! சரியான பேக்கு பாஸ்!


ஆர்டினியின் சிரிப்பொலி அடங்கு முன்னர் குகை முழுவதும் கொடூரமான சிரிப்பொலி எதிரொலித்தது!
இந்தச் சிரிப்பு... எங்கிருந்து வருகிறது?
ஹா ஹா ஹி ஹி ஹா ஹா


சிரிக்க முடிந்தவரை சிரித்துக் கொள் ஸ்பைடர்!.. ஏனெனில் உன்னை கூழ்கூழாக நசுக்கப் போகிறேன்.. ஹி! ஹி! ஹி!


அவன் சொல்வது நிஜம் ஸ்பைடர்! கூரை கீழ் நோக்கி வருகிறது!


நெமோ எப்படித் தப்புகிருனே அப்படியே நாமும் ஓடி விடலாம்!
நீ பார்த்தது கண்ணுடி பிம்பம் மடையா!... விலகுங்கள்-முக்கிய வேலே காத்துள்ளது!
அந்தக் கொடியவன் கொக்கரித்துக்கொண்டிருந்தபோது இந்தக் கருவியினுல் அவனது குரல் வரும் திசையை கண்டு கொண்டேன்...என் அமிலப் புகையை பயன்படுத்தி இனி இந்தப் பாறையை கரைக்கப் போகிறேன்!
இரட்டை ஜெட் குழாய்கள் ஸ்பைடரின் உடுப்பிலிருந்து அமிலப் புகையைப் பீச்சியடித்தன...
விரைவில் இந்த இருண்ட சிறையிலிருந்து தப்பிவிடலாம்!


இங்கு இன்ெனாரு குகைதான் உள்ளது! இதன் கூரை ரொம்பத் தணிவாக உள்ளது!
அப்படியானல் பொருத்தமான தொரு வாயிலைக் கண்டுபிடிக்கும்வரை துளைபோட்டுக் கொண்டே செல்ல வேண்டியதுதான்!
நம்பிக்கையின்றி அடுத்த குகைக்குள் அவர்கள் புக, அதன் கூரையும் தணிந்துகொண்டே வந்தது!
அந்தப் பக்கம் ஏதும் முன்னேற்றமுள்ளதா புரபஸர்!
ப-பார்க்க முடியவில்லை ஆனல் ...
ஐயோ, இதற்குத்தான் நான் அப்பொழுதே புலம்பினேன்!


இது ரொம்ப வித்தியாசமான குகை!


ஆமாம், ரொம்ப வித்தியாசமான குகை தான் இது! எனது எளிய இருப்பிடத்திற்கு வருக அற்ப மானிடர்களே!


'பட பட' வென பயங்கரவாதி நெமோ கைதட்ட, சிறு உருவங்கள் இரண்டு தரையிலே ஓடின...
தீயால் கிழிக்கப்பட்ட இக் கோட்டைத் தாண்டினால் உன் சாவு நிச்சயம்!


அங்கிருந்தே இந்தப் பொக்கிஷத்தைப் பார்! நீ திருடியது என்று உலக மெல்லாம் நினைத்துவரும் செல்வத்தைப் பார்! ஹி! ஹி!


போலீஸார் உன்னைத் தேடி வருகின்றனர்! ..நம்மில் ஒருவரை அவர்கள் கண்டுபிடிக்கும் வரை, உலகமே உன்னைத்தான் குற்றவாளி எனக் கூறும்! ஆகையால் போலீஸார் கண்களில் நீ படாது இருக்கவேண்டுமென்று தான் உன்னை இங்கே இட்டு வந்தேன்! ஹா! ஹா!
சாகாவரம் பெற்ற உன் கோமாளிகளைக் கொண்டு காலமெல்லாம் என்னை சிறைப்படுத்திவிடலாமென மனப்பால் குடித்தாயா அற்பனே?
உன் கணிப்பு தவறானது ஸ்பைடர்! இந்தப் பாதாள லோகத்தில் உற்பத்தியாகும் ஒரு சில அற்புத வாயுக்கள் உண்மையான சக்தியளிக்கக் கூடியவை! அத்தகைய சக்தியைக் கண்டுபிடித்துவிட்ட நான் சாகா காவலர்களை உருவாக்கியுள்ளேன்! ...இதோ பார்!


பாழும் குகையின் தரையில் மூன்று முறை மிதித்தான் நெமோ. உடனே ..
ஆற்றில் மூழ்கிய கிழட்டுப் படகோட்டியையும், எனது செல்லப் பிராணியையும் உனக்கு முன்பே தெரியுமல்லவா?

...இதோ கனவான்களே என் வளர்ப்புப் பிராணி!



எனது இளம் பெண் நண்பர்களையும், அவர்களது அருமை குதிரைச் சகாக்களையும் அறிமுகப்படுத்தத் தேவையில்லை ?



...பார்! உன்னிடம் தோல்வி யடைந்த அனைவரும் சாகா மல் வந்துவிட்டனர்-சூன் யக்காரக் கிழவி உட்பட!
நாசகாரா! உன்னைக் கண்டோ உன் பேய்ப் பட்டாளத்தைக் கண்டோ அஞ்சப் போவதில்லை!


மறுகணம் சற்றே எக்கிக்கொண்டு, பம்பரம் போலச் சுழல ஆரம்பித்தான்— அசுர கதியில்!
என்ன இது? உன் வித்தைகளெல்லாம் இனி பலிக்காது ஸ்பைடர்-!


ஆனால் ஸ்பைடர் நின்ற இடத்திலோ வெறும் கருப்பு உடையும், அதிலிருந்து பீச்சிடும் வலைப் பின்னலும் தான் கண்ணுக்குத் தெரிந்தது! அத்தனை வேகத்தில் சுழன்றான் வலை மன்னன்!
115


ஒரே விநாடியில் பெல்ஹாமும், ஆர்டினியும் வலைக் குவியலுடன் இழுத்துச் செல்லப்பட்டனர் ..


வீசியடித்த வலையிழைகள் அருகே நின்ற நெமோவையும் தன்னுடன் இணைத்துக்கொண்டன!


கனத்ததொரு வலைக்கூடு பிறந்தது அங்கே! அதன் சுழல் வேகமோ ஏறத்தாழ நிமிடத்திற்கு ஆயிரம் சுற்றுக்கள்!


சுழலும் வலை சிறிது சிறிதாக வேகத்தில் குறைந்தது! அதனை நோக்கி சாகாவரம் பெற்ற ஜந்துக்கள் முன்னேற கூரை பிழந்தது!


உடனே மேலிருந்து ஒரு இயந்திரக் கரம் நீண்டு, கனத்த வலைக் கூட்டை இருண்ட குகையிலிருந்து வெளியே இழுத்தது!


கூட்டினுள்ளே, பெல்ஹாமும் ஆர்டினியும் மெல்ல மெல்ல சுதாரித்துக்கொண்டனர்!
எ-என்ன நடந்தது பாஸ்?
சின்னதொரு முன்னேற்பாடு! குகைகளினுள் நுழையும் முன்னரே நான் ஹெலிகாரில் செயல் படுத்திய இயக்கம்!


அ-அந்த ஜந்துக்கள் எல்லாம் . நம்மைப் பின்தொடருமே? ..
பயம் வேண்டாம்! இப்பொழுது ஹெலி-காரிலிருந்து வீசப்படும் கனரக வெடிகுண்டு அந்தக் குகை வாயிலை முழுமையாக அடைத்து விடும்!


பயங்கரமான வெடிச் சத்தத்தைக் கேட்டு சுற்றுப் பகுதியிலிருந்த மக்கள் திடுக்கிட்டனர்...
வவ்! இத்தனை பெரிய வெடிவிபத்தை இன்று தான் நான் பார்க்கிறேன்! என்ன நடக்கிறது அங்கே?!



சிறிது நேரத்திற்குப் பின், உள்ளூர் பத்திரிக்கை ஆசிரியரை சந்திக்க, எதிர்பாரா விருந்தாளி ஒருவர் வந்திருந்தார்!
ஸ்-ஸ்பைடர்! உதவி! போலீஸ்! போலீஸ்!




பின்னர்—
எல்லாரும் தேடிக்கொண்டிருந்த பொக்கிஷம் இதோ! இனியாவது உன் ஒட்டை வாயை மூடிக் கொண்டிரு மடையா!



அன்று அதிகாலை ஐந்து மணிக்கு ..
இதோ, பாதாள ராஜ்யத்தின் தலைவன் நெமோ! .. ஸ்பைடர் பொம்மைகள் கிடைக்கும்...விலை ரூ. 5/-
அதற்குப் பின்...
பாஸ், இதைக் கொஞ்சம் கேளுங்கள்... 'நம் 20ம் நூற்றாண்டின் ஒப்பற்ற ஹீரோ ஸ்பைடர் தான்! நாட்டை சூறையாடிய பாதாளப் பாதகன் நெமோவை சட்டத்தின் பிடிக்குள் சிக்க வைத்த ஸ்பைடருக்கு நாடே கடமைப்பட்டுள்ளது!"
ஹா, இப்படியல்லவா இருக்க வேண்டும் தலையங்கம்!
இப்பொழுதாவது மடையர்களுக்கு உண்மை புரிந்துள்ளதே!






வெளியீடு எண்: 7. லயன் காமிக்ஸ் சார்பாக வெளியிடுபவரும் ஆசிரியரும்: S. விஜயன்.
முகவரி: லயன் காமிக்ஸ், த. பெ. எண்: 55, சிவகாசி

# ஹலோ Mr. ஆர்ச்சி!...




ஸ்பைடர் ஏற்படுத்திய பரபரப்பு அடங்குமுன் இரும்பு மனிதன்! எதைப் பாராட்டுவதென்றே தெரியவில்லை! தொடர்ந்து இரும்பு மனிதன் கதையை வெளியிடுங்கள். ஒரு வினா... துப்பறியும் கம்ப்யூட்டர் தொடருமா?

—K. மோகன்ராஜ், சேலம்-7

கண்டிப்பாகத் தொடரும் நண்பரே!

—ஆசிரியர்

---

இரும்பு மனிதன் புத்தகத்தைப் படித்தவுடன் அன்று இரவு நான் அதையே நினைத்துக்கொண்டிருந்தேன்!... நாமும இரும்பு மனிதனைப் போல் சக்திகள் பெற்றிருந்தால் அற்புத சாகஸங்கள் செய்யலாம் என்று எண்ணினேன்...

-கோ. முத்துகிருஷ்ணன், ஈரோடு-5

---

இரும்பு மனிதன், இரு வண்ண அச்சு, 'பள பள' வண்ண அட்டை. விறுவிறுப்பான கதை... இவற்றில் எதைப் பாராட்டுவது என்றே தெரியவில்லை! —V. S. அருண், சென்னை-11

---

வேலியைப் பிடுங்கி ஏணியாகச் சாத்தும் காட்சியை நான் மூன்று முறை படித்தேன்! மறக்க முடியாத இடம்!

—M. பல்லவன், திருச்சி-6

---

காதில் இப்படியா பூச்சுற்றுவது? அம்மாடி! -L. நரசிம்மன், தூத்துக்குடி

---

ஸ்பைடரையும் விட அற்புத சாகஸங்கள் இரும்பு மனிதன். பழு தூள்,

—N. பாபு, கோயமுத்தூர் மேற்கு



விரைவில்
எதிர் பாருங்கள்!
லயன்
காமிக்ஸ்
ரூ. 2/.




அச்சிட்டோர் :
முத்து ஃபைன் ஆர்ட்ஸ் பப்ளிகேஷன்ஸ், சிவகாசி.

லயன்

காமிக்ஸ்

# லயன் காமிக்ஸ்

## பெருமையுடன் வழங்கு

# பொங்கல் ஸ்பெஷல்!

## உங்கள் அபிமான
## கதாநாயகர்கள் தோன்று
## இரு அற்புதச் சித்திரக் கதைக

# ஸ்பைடர் தோன்றும்
# கொலைப்படை!

## மற்றும்

## இரும்பு மனிதன் தோன்றும்
# மர்மத்தீவு!

பார்க்க 126ம் பக்கம்


பொங்கல் ஸ்பெஷலில்....
"கொலைப் படை"
ஸ்பைடரின் அற்புத சாகஸங்கள்!
முழு நீளச் சித்திரக் கதைகள்
விலை ரூ. 4/-



பொங்கல் ஸ்பெஷலில்.....
இரும்பு மனிதன்
தோன்றும்
மர்மத் தீவு

லயன் காமிக்ஸ்



சிறப்பு இதழில் வெளிவரும்
இரண்டு அற்புத சித்திரக்
கதைகளைப் படிக்கத் தவறாதீர்கள்!

பிரதிக்கு



முந்துங்கள்


ஸ்பைடர் தோன்றும்
மிஸ்டர். மர்மம்
விரைவில் வருகிறது!
லயன் காமிக்ஸ்


லயன்
காமிக்ஸ்
ஸ்பைடரின்
பாதாளப் போராட்டம்